22R1588


# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangai Amman Kovil Street, Karapakkam, Chennai – 600 097
Phone: 044 - 28389040/43 E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/CC/Scholarship/2022/ 03778** **Date: 01.09.2022**

**முனைவர்.மூ.சௌந்தரராஜன். Ph.D.**
பதிவாளர் (பொ)

பெறுநர்:

முதல்வர்கள்/ நிர்வாகிகள்,
**அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்**

ஐயா,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - ஆதிதிராவிடர் நலத்துறை – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை 2022-2023 - இப்பல்கலைக்கழக இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகளுக்கான சுற்றறிக்கை - தொடர்பாக.

பார்வை: ஆதிதிராவிடர் நலத்துறை கடித எண்: ந.க.எண்.எல்4/14527/2022-3 நாள்: 18.08.2022.

-----

சென்னை, ஆதிதிராவிடர் நலத்துறையினரிடமிருந்து பெறப்பட்ட பார்வையில் கண்ட கடிதத்தில் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அளவில் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் கூறப்பட்டுள்ளது. (அவற்றின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) எனவே, இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் பார்வையில் கண்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1.9.22

பதிவாளர்(பொ)

1/2

இணைப்பு: ஆதிதிராவிடர் நலத்துறை கடிதம்.

**நகல்:**

1. Scholarship Nodal Officer, TNTEU.
2. M.Ed.-Students, M.Phil & Ph.D.-Scholars, TNTEU.
3. Coordinator - Warden-Hostels, TNTEU.
4. (Women's Hostel - Men's Hostel)
5. PA to VC
6. Registrar's Office

Receipt 26/8/2022
8721

பதிவஞ்சல் மூலம்:

ஆதிதிராவிடர் நலத்துறை

அனுப்புநர்,
திரு.த.ஆனந்த், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம்,
சென்னை– 05

பெறுநர்,
பதிவாளர்,
அனைத்து பல்கலைக்கழகம்
(இணைப்பில் உள்ளவாறு)

TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
25 AUG 2022
REGISTRAR OFFICE
CHENNAI - 600 097

ந.க.எண்.எல்4/14527/2022-3 நாள்: 18.08.2022

அய்யா/ அம்மையீர்,

பொருள்: ஆதிந – போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை – 2022-2023 – பள்ளி/கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்புவது – தொடர்பாக

பார்வை:
1. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்: 20.05.2022 , 03.06.2022 16.06.2022 , 01.07.2022 மற்றும் 03.08.2022

.....

2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அளவில் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் பின்வருமாறு.

1. அனைத்து கல்லூரிகளிலும் AISHE Code பெற்றிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்றிருப்பின் அவை பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
2. அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு, Scholarship Help desk ஒன்றை அமைத்திட வேண்டும்.
3. அனைத்து கல்லூரிகளில் கல்வி உதவித்தொகைக்கென Nodal Officer நியமித்திட வேண்டும்.

4. மாணாக்கரின் பெயர், பாலினம், பிறந்த தேதி ஆகியவை கல்வி சான்றிதழ்களில் (10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும் . அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்படவேண்டும் .
5. மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் (Online) வருமான சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.
6. மாணாக்கரின் ஆதார் எண், அம்மாணவரின் வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
7. மாணாக்கரின் பெயரில் வங்கி கணக்கு எண் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவ்வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
8. மாணாக்கரின் வங்கி கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர், அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை இணையதளம் விரைவில் திறக்கப்பட உள்ளதால், மேற்கண்ட விவரங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அனைத்து கல்லூரிகளுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- த.ஆனந்த்
ஆதிதிராவிடர் நல இயக்குநர்

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக